## May 19, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மேற்காசிய போர், உக்ரைன்-ரஷியா இடையேயான போர்களுக்கு பேச்சு வார்த்தை மற்றும் ராஜீய வழிகளில் அமைதித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

(i) பிரதமர் மோடி ஸ்வீடன் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, நார்வேக்கு சென்றுள்ளார். அங்கு தலைநகர் ஓஸ்லோவில் நார்வே பிரதமர் ஜோனஸ்கார் ஸ்டோரை சந்தித்துப் பேசினார். அப்போது தலைவர்கள், இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவுகளை மேம்படுத்த அதிக கவனம் செலுத்துவது என தீர்மானித்தனர்.

(ii) சர்வதேச சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பதையும் இரு நாடுகளும் ஒப்புக் கொள்கின்றன. அதேபோல் பயங்கர வாதம் எந்த வடிவில் இருந்தாலும் அது வேருடன் அகற்றப்பட வேண்டும் என்பதிலும் உறுதி பூண்டுள்ளோம் என்றார் பிரதமர் நரேந்திர மோடி.

(iii) அதேபோல், இந்தியா தலைமையிலான இந்திய- பசிபிக் கடல்கள் அமைப்பில் நார்வே இணைய முடிவு செய்திருப்பதையும் வரவேற்கிறேன். கடல் பகுதியைக் கொண்ட 2 முக்கிய நாடுகள் என்ற முறையில் இந்தியா, நார்வே கடல்சார்ந்த பாதுகாப்பு, கடல் சார்ந்த பொருளாதாரம் உள்ளிட்டவற்றில் வலுவான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதில் இணைந்து பணியாற்ற முடியும் என்றார்.

(iv) மோடிக்கு நார்வே அரசு விருது

- நார்வே நாட்டில் நடை பெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு, இந்தியா- நார்வே நட்புறவை மேம்படுத்த ஆற்றிய பங்களிப்புக்கும், தலைமைத்துவத்தையும் பாராட்டி, நார்வே நாட்டின் மிக உயரிய விருதாக கருதப்படும் 'கிராண்ட் கிராஸ் ஆப் தி ராயல் நார்வேயன் ஆர்டர் ஆப் மெரிட்' விருது வழங்கப்பட்டது. அந்த விருதை நார்வே அரசர் 5-ஆவது ஹரால்ட் வழங்கினார்.
- இந்த விருது, பிரதமர் மோடிக்கு வழங்கப்படும் 32-ஆவது சர்வதேச விருது ஆகும். எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், பிரதமர் மோடி தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார்.

2. கிளாண்டர்ஸ்' தொற்று காரணமாக சுற்றுலா தலங்களில் குதிரை சவாரிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நோய் அறிகுறிகள் உள்ள குதிரைகளை சவாரிக்கு பயன்படுத்த வேண்டாம் என்று கால்நடை பராமரிப்புத் துறை உத்தரவிட்டுள்ளது.

(i) சென்னையில் கிளாண்டர்ஸ் எனப்படும் பாக்டீரியா தொற்றுக்குள்ளாகி குதிரை உயிரிழந்தது. விலங்குகளிடையே மிக வேகமாகப் பரவும் இந்த தொற்றால் வளர்ப்புப் பிராணிகள் இறக்கக்கூடும். இதையடுத்து 140-க்கும் மேற்பட்ட குதிரைகளுக்கு ரத்தப் பரிசோதனையை சென்னை மாநகராட்சி மேற்கொண்டது.

(ii) பாதிக்கப்பட்ட குதிரையின் உடலில் இருந்து வெளியேறும் திரவம் மற்றும் நீர்த்திவலைகளால் அதனைப் பராமரிப்பவர்களுக்கும் கிளாண்டர்ஸ் தொற்று பரவலாம் என்பதால் மக்கள் நல்வாழ்வுத் துறையும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது.

(iii) இதனிடையே, கடற்கரைகள், உதகை, கொடைக்கானல் போன்ற மலைப்பகுதிகள் உள்பட அனைத்து சுற்றுலா தலங்களிலும் குதிரை சவாரிக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி குதிரைகளை பராமரிக்குமாறு தமிழ்நாடு கால்நடைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

3. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் இடையேயான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, அமெரிக்க வேளாண் பொருள்களின் இறக்குமதியை அதிகரிக்க சீனா ஒப்புக் கொண்டுள்ளது.

(i) இதன்படி, நடப்பாண்டு முதல் 2028 வரை ஆண்டுக்கு சுமார் 1,700 கோடி டாலர் மதிப்பிலான மாட்டிறைச்சி, கோழி இறைச்சி போன்ற வேளாண் பொருள்களைச் சீனா கொள்முதல் செய்யும் என்று அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

(ii) சீனா உள்பட பல்வேறு உலக நாடுகளுக்கு எதிராக டிரம்ப் நிர்வாகம் கடந்த ஆண்டு தொடங்கிய வர்த்தகப் போரினால் அமெரிக்க விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

(iii) இந்தப் பாதிப்பைக் குறைக்கும் நோக்கில், அதிபர் டிரம்ப் அண்மையில் சீனாவுக்கு அரசுமுறைப்பயணம்

மேற்கொண்டு, அந்நாட்டு அதிபர் ஷி ஜின்பிங்குடன் தீவிர ஆலோசனை நடத்தினார். அப்போது ஏற்பட்ட உடன்பாட்டின்படி, அமெரிக்க மாட்டிறைச்சிக்கான சந்தை அனுமதியை சீனா மீண்டும் வழங்கவுள்ளது.

(iii) மேலும், பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லைஎன்று அமெரிக்க வேளாண் துறையால் சான்றளிக்கப்பட்ட மாகாணங்களில் இருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்யவும் சீனா ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த ஆண்டு சீனா மேற்கொண்ட சோயாபீன் கொள்முதல் ஒப்பந்தத்துக்கு கூடுதலாக இப்புதிய வர்த்தக உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது. கடந்த காலங்களில், அமெரிக்க வேளாண் பொருள்களின் முன்னணி சந்தையாக சீனா விளங்கியது. கடந்த 2022-இல் 3,800 கோடி டாலராக இருந்த அமெரிக்காவின் வேளாண் ஏற்றுமதி, இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகப் போர் காரணமாக கடந்த ஆண்டில் 800 கோடி டாலராக கடுமையான வீழ்ச்சியைக் கண்டது. குறிப்பாக,சோயாபீன் மற்றும் மாட்டிறைச்சி ஏற்றுமதி முடங்கிய நிலையில், தற்போதைய ஒப்பந்தம் அமெரிக்க விவசாயிகளுக்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதுடன், ஓரளவுக்குப் பொருளாதார நிவாரணம் அளிக்கும் என்று கருதப்படுகிறது.

(iv) இரு நாடுகளுக்கும் இடையேயான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த ‘வர்த்தக வாரியம்', 'முதலீட்டு வாரியம்' ஆகிய இரு புதிய அமைப்புகளை உருவாக்கவும் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

(v) இதன்மூலம், பாதுகாப்பு அற்ற பொதுவான பொருள்களின் வர்த்தகத்தை முறைப்படுத்தவும், இரு நாடுகளின் கவலைகளுக்குத் தீர்வு கண்டு பரஸ்பர வரி குறைப்புகளைச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக சீன வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

4. இந்திய மகளிர் கூடைப்பந்து அணியின் முன்னாள் கேப்டனும், ஒலிம்பியனுமான ஜெனிஃபர் பயஸ் (72), புற்று நோயால் நீண்டகாலம் அவதிப்பட்டு வந்த நிலையில் காலமானார். இவர் இந்திய டென்னிஸ் நட்சத்திரம் லியாண்டர் பயஸின் தாயார்.

5. இத்தாலியன் ஓபன் டென்னிஸ் போட்டியில், உள்நாட்டு வீரரான யானிக்சின்னர் சாம்பியன் கோப்பை வென்றார். இதன் மூலமாக, மாஸ்டர்ஸ் பிரிவின் 9 போட்டிகளிலும் வாகைசூடி, கேரியர் கோல்டன் மாஸ்டர்ஸ் வென்றவராக வரலாறு படைத்தார்.

- டென்னிஸ் வரலாற்றில் 9 மாஸ்டர்ஸ் போட்டிகளிலும் சாம்பியனான 2-ஆவது வீரராக சின்னர் இணைந்திருக்கிறார். செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 2018-இல் அந்த மைல்கல்லை எட்டி முதல் வீரராக இருக்கிறார்.
- மாஸ்டர்ஸ் போட்டிகளில் தொடர்ந்து 6 பட்டங்கள் வென்ற முதல் வீரராக சின்னர் சாதனை படைத்தார். இதற்கு முன் ஜோகோவிச், நடால் ஆகியோர் தொடர்ந்து 4 முறை வென்றதே அதிகபட்சமாக இருந்தது. பாரீஸ், இண்டியன் வெல்ஸ், மியாமி, மான்டிகார்லோ, மாட்ரிட், ரோம் ஆகிய போட்டிகளில் சின்னர் அடுத்தடுத்து சாம்பியனாகியுள்ளார்.
- இத்தாலியன் ஓபன் போட்டியில் கடந்த 50 ஆண்டுகளில் சாம்பியனான முதல் உள்நாட்டு வீரர் என்ற பெருமையை சின்னர் பெற்றார். இதற்கு முன் 1976-இல் அட்ரியானோ பனாடா இங்கு வாகை சூடியிருந்தார். மகளிர் பிரிவில் ஜாஸ்மின் பாலினி 2025-இல் இப்போட்டியில் சாம்பியன் ஆனார்.
- களிமண் களத்தில் நடைபெறும் 3 மாஸ்டர்ஸ் போட்டிகளிலுமே (மான்டிகார்லோ, மாட்ரிட், ரோம்) ஒரே சீசனில் சாம்பியனான 2-ஆவது வீரர் ஆனார் சின்னர். முதல் வீரர் நடால் ஆவார்.
- மாஸ்டர்ஸ் போட்டிகளில் தோல்வியின்றி தொடர்ந்து அதிக வெற்றிகளைப் பதிவு செய்தவராக, 34 வெற்றிகளுடன் சின்னர் தனது சாதனையைத் தொடர்கிறார்.
- இத்துடன் 10 மாஸ்டர்ஸ் போட்டிகளில் சாம்பியனாகியிருக்கும் சின்னர், அவை அனைத்தின் இறுதி ஆட்டங்களிலுமே தன்னை எதிர்த்த வீரர்களுக்கு ஒரு "செட்டை கூட விட்டுத்தராமல் நேர் செட்களில் (20) வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

6. ‘க்வாட்' கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டம் இந்தியாவில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) க்வாட் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாற்கர நாடுகள் உள்ளன. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்தக் கூட்டமைப்பு செயல்படுகிறது.

(ii) ஒவ்வோர் ஆண்டும் உறுப்பு நாடுகளில் ஒன்று கூட்டமைப்புக்கு தலைமை ஏற்கும் நிலையில், நிகழாண்டு இந்தியா

தலைமையில் க்வாட் உச்சிமாநாடு நடை பெறவுள்ளது. இருப்பினும், உச்சிமாநாடு நடைபெறும் தேதிகள் குறித்து அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகவில்லை. இதனிடையே க்வாட் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டம் புது தில்லியில் மே 26-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(iii) உக்ரைன் போர், மேற்காசிய விவகாரம், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் சீன ஆதிக்கம் என பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது எனத் தெரிவித்தன.

7. மேற்கு வங்கத்தில் மகளிருக்கு வரும் ஜூன் 1 முதல் மாதந்தோறும் ரூ.3,000 நிதியுதவி அளிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

(i) மேற்கு வங்க மாநிலம் ஹௌராவில் உள்ள தலைமைச் செயலகத்தில் முதல்வர் சுவேந்து தலைமையில் இரண்டாவது அமைச்சரவைக்கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து மாநில மகளிர், குழந்தைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் அக்னிமித்ரா பால் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

- மேற்கு வங்கத்தில் உள்ள மகளிருக்கு வரும் ஜூன் 1 முதல் 'அன்ன பூர்ணா' திட்டத்தின் கீழ், மாதந்தோறும் ரூ.3,000 நிதியுதவி அளிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. குடியுரிமை திருத்தச் சட்டத் தின் கீழ் குடியுரிமைக்கு விண்ணப்பித்த பெண்கள், வாக்காளர் பட்டியலில் மீண்டும் பெயர் சேர்க்க விண்ணப்பித்த பெண்களுக்கும் ரூ.3,000 நிதியுதவி அளிக்கப்படும்.
- மேலும், மாநில அரசுப் பேருந்துகளில் ஜூன் 1 முதல் பெண்களுக்குக் கட்டணமில்லாப்பயண திட்டத்துக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ஓபிசி பட்டியல் ரத்து: திரிணமூல் ஆட்சியில் மாநிலத்தின் இதரப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் (ஓபிசி) முஸ்லிம்கள் சேர்க்கப்பட்ட நிலையில், அந்தப் பட்டியல் ரத்து செய்யப்பட்டு திருத்தியமைக்கப்படும். மசூதிகளில் பதிவு செய்த இமாம்கள் உள்ளிட்ட மத தலைவர்களுக்கு அளிக்கப்படும் மாதாந்திர உதவித்தொகையை ரத்து செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்று தெரிவித்தார்.

8. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பிசிசிஐ) பொது அதிகார அமைப்பு அல்ல; எனவே அந்தச் சட்டத்தின் கீழ் கேட்கப்படும் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க வேண்டிய கடமை பிசிசிஐக்கு இல்லை' என்று மத்திய தகவல் ஆணையம் (சிஐசி) தெரிவித்தது.

(i) எந்தெந்த விதிகள் மற்றும் அதிகாரங்களின் கீழ், தேசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்தியாவின் பிரதிநிதியாக பிசிசிஐ செயல்பட்டு, அந்தப் போட்டிகளுக்கு வீரர்களைத் தேர்வு செய்கிறது என்ற விவரங்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிப்பது தொடர்பான மேல்முறையீட்டு மனு ஒன்றை மத்திய தகவல் ஆணையம் விசாரித்தது. இந்த விசாரணையைத் தொடர்ந்து தனது உத்தரவில் தகவல் ஆணையர் பி.ஆர்.ரமேஷ் தெரிவித்ததாவது:

- பிசிசிஐ என்பது தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சியான தனியார் அமைப்பாகும். அரசியல் சாசனம், நாடாளுமன்றம், மாநில சட்டப்பேரவை அல்லது அரசு அறிவிக்கை மூலம் அந்த அமைப்பு ஏற்படுத்தப்படவில்லை.
- தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 2(ஹெச்)-இன் கீழ், பிசிசிஐயை பொது அதிகார அமைப்பு என்று வரையறுக்க முடியாது.
- எனவே தற்போதைய விவகாரத்தில் உண்மைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் அடிப்படையில், தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவுகள் பிசிசி ஐ-க்குப் பொருந்தாது.

9. இந்தியாவில் முதலீடு செய்யும்படி ஸ்வீடன் நாட்டு நிறுவனங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

(i) ஸ்வீடன் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, கோதன்பர்கில் அந்நாட்டு பிரதமர் உல்ப் கிறிஸ்டர்சனை சந்தித்துப் பேசினார். இரு நாடுகள் இடையேயான இருதரப்பு உறவை ஆய்வு செய்ததுடன், ராஜீயமற்றும் பொருளாதார, தொழில்நுட்ப உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தினர்.

(ii) அப்போது தலைவர்கள் இரு வரும், இந்தியா-ஸ்வீடன் இடையேயான வர்த்தகத்தையும், முதலீடுகளையும் அடுத்த 5 ஆண்டுகளில் இரு மடங்காக அதிகரிக்க ஒப்புக் கொண்டனர். இந்த சந்திப்பின் போது ஸ்வீடன் நாட்டு இளவரசி விக்டோரியாவும் உடனிருந்தார்.

(iii) பிரதமர் மோடி, ஸ்வீடன் பிரதமர் சந்திப்புக்குப் பிறகு இரு நாடுகள் சார்பாகவும் கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

அதில், சீர்திருத்தம் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராக ஸ்வீடன் ஆதரவு அளிக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

(iv) ஸ்வீடன் நிறுவனங்களுக்கு அழைப்பு:

- கோதன்பெர்க்கில் ஐரோப்பிய நிறுவனங்கள் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மோடி, இந்தியாவில் சீர்திருத்த நடவடிக்கைகள் அதிவேகத்தில் செல்வதாகவும், ஆதலால் ஸ்வீடன் நிறுவனங்கள் இந்தியாவில் பசுமை ஹைட்ரஜன் திட்டம், தூய எரிசக்தி, தயாரிப்பு, தொலைத் தொடர்புத் துறை, டிஜிட்டல் கட்டமைப்பு, மின்சாதனங்கள், ஏஐ, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்ய வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.
- இந்நிகழ்ச்சியில் ஸ்வீடன் பிரதமர் கிறிஸ்டர்சன், ஐரோப்பிய யூனியன் தலைவர் உர்சுலா வான்டெர் லெயன், ஐரோப்பிய தொழில் துறை தலைவர்கள், இந்திய நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.